1996 பிப்ரவரி 17]

அங்கே நிலையம் அமைக்க இடம் வேண்டுமென்று கேட்டார்கள். நானும் அவர்களை அழைத்துக்கொண்டு அந்த இடத்தைக் காட்டினேன். அந்த இடம் சரியான இடம் என்று அவர்கள் ஒப்புதல் தந்து விரைவிலே அதை அமைக்க முயற்சி செய்கிறோம் என்று சொன்னார்கள். சில மாதத்திற்கு முன்னால் பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். அந்தக் குளிரூட்டும் நிலையத்தை வேறு எங்கேயோ போய் அமைக்கப் போவதாக, வேறு இடத்தில் அமைப்பதாகச் செய்தி வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள். அதாவது ஒவ்வொரு உறுப்பினரும் இதைப்போல் ஒரு பெரிய சொற்பொழிவு நிகழ்த்திக்கொண்டு போவதால்தான் நான் தினசரி ஒரு மணி நேரத்திற்குள் கேள்வி நேரத்தை முடிக்க முடிவதில்லை. துணைக் கேள்வி என்றால் துணைக் கேள்வியாகக் கேட்க வேண்டும், கேளுங்கள்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் அதை மறுபரிசீலனை செய்து அந்தத் திருக்காட்டுப்பள்ளியிலே பால் குளிரூட்டும் நிலையத்தை அமைக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் அந்தப் பகுதியிலே 10 ஆயிரம் லிட்டர் பால் ஒரு நாளைக்கு உற்பத்தி செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் பகுதியிலே ஒரு நாளைக்கு 650 லிட்டர் பால்தான் உற்பத்தி ஆகிறது. ஆகவே, தேவையான அளவில் பால் உற்பத்தி அந்தப் பகுதியிலே பெருகுகின்ற நேரத்திலே அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 53, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

53—

கைத்தறி நெசவாளர்களின் கூலியைச் சீராக்குதல்

*48815—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவாளர்களின் கூலியை தமிழ்நாடு முழுவதும் ஒரே சீராகக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆவன செய்ய இயலாது.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரை, உழவையும், நெசவையும் இரண்டு கண்களாகக் கொண்டு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய புனித ஆட்சியிலே நெசவாளர்களை வாழ வைப்பதற்காக 82 இலட்சம் சேலைகளையும், 80 இலட்சம் வேட்டிகளையும் நெய்யச் சொல்லி, ஒரே நேரத்திலே இரு தரப்பினரையும் வாழ வைக்க நெசவாளர்களுக்குப் பணியையும் கொடுத்து, ஏழைகளுக்கு இலவசமாக வேட்டி, சேலைகளையும் கொடுத்துக்கொண்டிருக்கிற இந்தப் புனிதமான ஆட்சி நடந்துகொண்டு இருக்கிற சூழ்நிலையில் நெசவாளர்களுக்குத் தமிழகம் முழுவதிலும் சீரான கூலியை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமானால் பணி கொடுத்தும், அதனால் ஏற்படக்கூடிய பயன் அவர்களுக்கு ஓரளவிற்கு நியாயமானதாக இருக்கும். நெசவாளர்களைப் பொறுத்தவரை மானத்தைக் காக்கக்கூடிய ஆடையை நெய்துகொண்டு இருந்தாலும், அவர்கள் வயிற்றுக் கஞ்சியையே உணவாகக் கொண்டிருக்கக்கூடிய, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய ஒரு சூழ்நிலையை மாற்றுவதற்கு, தமிழகம் முழுவதிலும் இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு, கூலித் தொழிலாளர்களுக்கு சீரான கூலியைக் கொடுப்பதற்கு மாநில அரசு மீண்டும் ஏதாவது ஒரு முறை இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரே சீரான கூலியை வழங்கினால் அவர்கள் நெய்யக்கூடிய துணிகளுக்கு நஷ்டம் ஏற்படும். ஏனென்றால், அவர்கள் ஏறக்குறைய 17 வகையான துணிவகைகளை நெய்து வருகிறார்கள். அந்தந்தத் துணி வகைகளுக்கு ஏற்ப, துணியின் வேலைப்பாடுகளுக்கு ஏற்பதான் கூலி வழங்கப்படுமேயன்றி, ஒரே சீராக வழங்கினால் நல்ல துணிகளை நெய்பவர்களுக்குக் குறைவாக கூலி கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும். ஒரே விதமான துணி நெய்பவர்கள்கூட

அந்தத் துணியினுடைய தரம், வேலைப்பாடு மாறுபட்டிருந்தால் ஒரே சமயத்தில் ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவது மிகக் கடினமாகும். எனவே, துணியினுடைய தரம், வேலைப்பாடு, இதனைத் தயாரிக்கும் காலம், இவற்றை எல்லாம் பொறுத்துத்தான் கூலி வழங்கப்படும். அதுதான் நெசவாளர்களுக்குப் பொருத்தமானதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது 17 விதமான துணிகளை நெசவுத் தொழிலாளர்கள் நெசவு செய்வதால் அவர்களுக்கு ஒரே விதமான கூலியைத் தர முடியாது என்று கூறினார்கள். ஆனால் இப்பொழுது அவர்களுக்கு வேலைப்பளு என்பது எவ்வளவு மணி நேரம் என்பதுகூட இல்லாமல் குறைந்த கூலியைக் கொடுத்துக்கொண்டு, ஒருசில நெசவுத் தறியை வைத்திருப்பவர்கள், இவர்களைக் கொத்தடிமைகள்போல வேலையை வாங்கிக்கொண்டு, கூலியையும் கொடுக்காமல் மிகவும் துன்புறுத்துகிறார்கள். குறிப்பாக, கோவை மாவட்டத்தில் லட்சக்கணக்கான நெசவுத் தொழிலாளர்கள் பல நாட்கள் பட்டினிப் போராட்டம் என்கின்ற போராட்டத்தைக்கூட நடத்தி, பிறகு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு அந்தக் கூலியைப் பெற்றுக் கொடுப்பதற்காக நடத்தப்பட்ட போராட்டத்தின் மூலம்தான் அவர்கள் கூலியைப் பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இப்பொழுது மீண்டும் தொடர்ந்து அவர்களைத் துன்புறுத்தி, அச்சுறுத்தி, வேலை செய்வதில் 15 மணி நேரம், 16 மணி நேரம் என்று வேலையை வாங்கிக்கொண்டு, மாதக் கணக்கில் கூலியைக் கொடுக்காமல் அவர்களைத் தொல்லைக்கு ஆளாக்குகிறார்கள்.

அதனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் கனிவுடன் பரிசீலித்து, எதையும், எப்போதும் ஏழைகளுக்காகவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள் என்று சொல்லுகிறேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தக் கைத்தறி நெசவுக் கூலித் தொழிலாளர்களுக்காக ஒரு கமிட்டியை நியமித்து, அவர்கள் எந்தத் துணியை நெசவு செய்வதற்கு எவ்வளவு கூலி என்பதை

சீராக நிர்ணயித்து, தமிழகம் முழுமையும் அதை முழுமையாக அமுல்படுத்தி, நடைமுறைப்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலே இருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரே சீரான கூலியை வழங்குவது சாத்தியமில்லை என்று நான் குறிப்பிட்டேன். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களில் இப்படி கூலி வேலை செய்து, நெசவுத் தொழில் செய்பவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எவ்விதப் பாகுபாடுமின்றி பருத்தி பட்டு கலந்து, ஜனதா ரகம் என்று இருக்கின்றதை நெசவு செய்யும் அனைத்து வகை நெசவுத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் பெற்றுவரும் அடிப்படைக் கூலியில் 10 சதவீதம் ஒரே சீரான அகவிலைப்படி வழங்க உத்தரவிட்டிருக்கிறார் என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 54, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

54—

பாவலர் பிறந்த வீட்டை நினைவகமாக்குதல்

*108290—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்த வீட்டை அரசு நினைவகமாக மாற்ற ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 4¾ ஆண்டுகளிலே இந்தியாவிலே எந்த ஒரு முதல் மந்திரியும் சாதிக்க முடியாத சாதனைகளைப் படைத்துள்ளது நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலேதான். மாவட்டங்களைப் பிரிக்கும்போது மறைந்த தலைவர்களின் பெயர்களை வைப்பது, புலவர்கள் பிறந்த வீடுகளை நினைவுச் சின்னமாக்குவது,